Consulate General of the Democratic
Socialist Republic of Sri Lanka

القنصلية العامة لجمهورية
سري لانكا الديمقراطية الاشتراكية

# அறிவித்தல்

கோரிக்கைகளின் மாறுபட்ட தன்மை மற்றும் ஏராளமான இலங்கையர்கள் திருப்பி அனுப்பப்படுவதற்குக் காத்திருப்பதால், இலங்கை பொது தூதரக அலுவலகம் ஒவ்வொரு திருப்பி அனுப்பும் விமானத்திற்கும் ஒரு தேர்வு அளவுகோலை ஏற்றுக்கொண்டது.

ஒவ்வொரு திருப்பி அனுப்பும் விமானத்திற்கும் எங்கள் முன்னுரிமை தேர்வு அளவுகோல்கள் தண்டணைப்பணம் செலுத்த வேண்டிய நிலைமையிலுள்ள ரத்து செய்யப்பட்ட / காலாவதியான விசாக்கள், கர்ப்பிணி பெண்கள், மூத்த குடிமக்கள், அவசர கவனம் தேவைப்படும் தீவிர மருத்துவ நிலைமைகளைக் கொண்டவர்கள் (மருத்துவரின் குறிப்பு தேவை) பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டவர்கள் , ராஜினாமா செய்தவர்கள் மற்றும் சம்பளமற்ற லீவில் அனுப்பப்பட்டவர்கள் போன்றவர்கள் ஆகும்.

சில நபர்கள் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்றும் மற்றும் முன்னுரிமை கொடுக்கப்பட்ட தேர்வு பட்டியலில் பெயர்களை சேர்க்கலாம் என்று கூறி பணம் சேகரிப்பது எங்கள் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதுபோன்ற நபர்கள் குறித்து சமூக உறுப்பினர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் உடனடியாக தூதரக பொது அலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம். நிரூபிக்கப்பட்டால், அவர்களுக்கு எதிராக ஐக்கிய அரபு எமிரேட் சட்டத்தின் கீழ் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

P.O.Box: 51528, Dubai, U.A.E.
Tel: +971 4 3986535 Fax: +971 4 3984687
E-mail: condubai@slcgdxb.ae

ص.ب: ، دبي – الامارات العربية المتحدة
تليفون: ٣٩٨٦٥٣٥ ٤ ٩٧١+ ، فاكس: ٣٩٨٤٦٨٧ ٤ ٩٧١+
البريد الإلكتروني : condubai@slcgdxb.ae